[11th February 1958

* 30 *Q*.—Sri P. G. MANICKAM : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the places in the State where the fresh wave of influenza fever is prevalent;

(*b*) the measures taken to prevent the attack of influenza ; and

(*c*) the foreign countries from which this fever has spread to this State?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) No fresh wave of influenza has been noticed in any part of the State.

(*b*) Instructions have been issued to the Medical and Public Health authorities to be on the guard against the possibility of a recrudescence of influenza and to take all precautionary measures. Passengers arriving at the seaports and airports are subjected to medical examination to ensure that there is no fresh importation of the disease into this State.

(*c*) The first wave of influenza is believed to have spread to this State from Singapore and Malaya.

Sri N. K. PALANISAMI : ஸார், கிராமப்புறங்களில் ஏராளமான பேர் இந்த வியாதியினால் பீடிக்கப்பட்டு கஷ்டப்பட்டு வருகிறார்கள். கனம் மந்திரி அவர்கள் விசாரித்து அந்த இடங்களில் எல்லாம் கொடுக்கப்பட்டு வரும் இன்ஜெக்ஷனுக்குப் பதில் பில்ஸ்ஸாக மாற்றி கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா ?

The Hon. Sri M. A. MANICKAVELU: இரண்டாவது இன்புளூயன்ஸா வரவில்லை. கிராமப்புறங்களில் வந்தது எல்லாம் சாதாரண ஜுரம்தான். அதை இன்புளூயன்ஸா என்று சொல்லுகிறார்கள். இதை தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மோட்டார் வசதிகளும் மருந்து வசதிகளும் டாக்டர் வசதிகளும் தயாராக வைத்திருப்பதற்கு ஒரு ஸ்கீம் இருக்கிறது.

Sri P. G. MANICKAM : கிராமப்புறங்களில் இந்த நோயை தடுப்ப தற்கு வேண்டி இதற்கான மருந்துகளை அங்கேயுள்ள பஞ்சாயத்து போர்டு வசம் ஒப்படைக்கப்பட்டு வருகிறது. ஆனால் இதை கொடுப்பதற்கு எல்லாம் டாக்டர்களிடம்தான் திட்டங்கள் இருக்கிறது. இவையெல்லாம் சரிவர கொடுக்கப்பட்டு வருகிறதா என்பதை கவனிப்பதற்கு எதாவது திட்டம் இருக்கிறதா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : இதை தடுத்து மருந்து கொடுப்பதற்குதான் திட்டங்கள் வகுக்கப்பட்டு இருக்கிறது. வேறு எந்த வகையில் திட்டம் வகுத்தால் பிரயோஜனமாய் இருக்கும் என்ற தெரிய வில்லை.

Sri K. VINAYAKAM : Sir, is it a fact that ' flu ' is prevalent only in broadcasting receiving sets where the synopsis announcer frightens the public with the prevalence of the influenza and suggests two tablets of cafiaspirin?

Mr. SPEAKER : Insinuating questions are not allowed usually.

The Hon. Sri M. A. MANICKAVELU : A separate question will be welcome, Sir.

11th February 1958]

SRI A. A. RASHEED : Is it a fact that the threatened ' second flu ' did not occur in Madras because of our preparedness?

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, it was afraid of our thorough preparedness.

SRI P. G. MANICKAM : ஸார், கிராமப்புறங்களில் பஞ்சாயத்து போர்டுகளில் கொடுக்கப்படும் மருந்துகளை அங்கே இருக்கக்கூடிய டிஸ்பென்ஸரிகளில் கொடுப்பதற்கு அரசாங்கத்தார் உத்தரவு போடுவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அந்த மாதிரி மருந்துகள் அவசியமில்லை என்றால் அதை வாபஸ் வாங்கி பின்னால் பார்த்துக் கொள்ளலாம்.

Sales tax

* 31 *Q*.—SRI N. K. PALANISAMI, SRI V. K. KOTHANDARAMAN, SRI S. LAZAR AND SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have received the report of Dr. Lokanathan on the working of Sales Tax in the State;

(*b*) if so, whether the Government will place the report on the Table of the House; and

(*c*) whether the recommendations made by him will be implemented?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) Copies of the report have already been placed on the Table of the House.

(*c*) The matter is under consideration.

SRI N. K. PALANISAMI : திரு. லோகநாதன் அவர்கள் சிபாரிசுகளில் 50 ஆயிரம் ரூபாய்க்கு மேல் டர்ன் ஓவர் ஆகக்கூடியவர்களுக்கு 100-க்கு 85 பங்கு வருகிறது என்றும், சாக்காருக்கு இதனால் நஷ்டம் இல்லை என்றும், 10,000 முதல் 15,000 வரை 5 ரூபாய் என்றும், 15,000 முதல் 20,000 வரை 8 ரூபாய் என்றும், 20,000 முதல் 25,000 வரை 12 ரூபாய் என்றும் சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது. இந்த சிபாரிசுகளை அரசாங்கத்தார் எற்றுக்கொள்வார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : ஸார், இது பரிசீலனையில் இருந்து வருகிது.

SRI V. K. KOTHANDARAMAN : லோகநாதன் அவர்கள் சிபாரிசின்படி உணவு பொருள்போன்ற அத்தியாவசியமான பண்டங்களுக்கு விற்பனை வரியிலிருந்து சர்க்கார் விலக்கு அளிப்பார்களா என்பதை கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : அதுவும் பரிசீலனையில் இருக்கிறது.